In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : SC.514/2023

Deposition of P.W.7

****

Name திரு.முத்துப்பாண்டி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 2nd day of September 2025.

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆறுமுகநேரி கீழநவலடிவிளையில் குடியிருந்து வருகிறேன், நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். 05.10.2020 அன்று இரவு 7, 7.30 போல் இருக்கும், நான் வேலைக்கு போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்த போது லிங்கராஜா கொலை செய்து விட்டார் என்று நான் கேள்விப்பட்டு, ஆறுமுகநேரி ஸ்டேட் பேங்க் எதிரே உள்ள கோட்டாளம் ஆட்டுக் கறிக்கடைக்கு அருகே சென்ற போது போலீசார் அங்கு நின்று கொண்டு அந்த இடத்தை போட்டோ எடுத்துக் கொண்டு, இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை எடுத்தனர். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையது தான். அது சம்பவ இடத்தில் வைத்து தான் போட்டேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2,** அத்தாட்சி **அ.சா.ஆ.3**, இரத்தம் பட்ட மண் **சா.பொ.3**, இரத்தம் படாத மண் **சா.பொ.4** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை :**

நான் தனசேகரன் என்ற இன்ஜீனியரிடம் வேலை செய்து வருகிறேன். நான் சம்பவ இடத்திற்கு 7, 7.30 மணிக்கு வந்தேன். அந்த சமயத்தில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினர். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, நான் படித்து பார்க்கவில்லை. இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் எடுத்த

RAMANUJAM VASANTHI Digitally signed by RAMANUJAM VASANTHI Date: 2025.09.02 15:30:44 +0530

விபரங்களை போலீசார் சொல்லி தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் என்று சொல்லி ஏதேதோ எடுத்தார்கள், எனக்கு தெரியவில்லை. இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை செல்போனில் போட்டோ எடுத்தார்கள், அதை தான் நான் பார்த்தேன். அந்த இடத்திலிருந்து எந்த பொருட்களும் எடுத்து போகவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் என்னை விசாரித்தனர். நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்னவற்றை தான் போலீசாரிடமும் சொன்னேன் என்றால் சரிதான். என்னிடம் கையொப்பம் பெற்றனர். நான் சொல்வது போல என்னிடம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து வாங்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து பெற்றனர் என்றாலும் சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளது போல இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை எடுத்தனர் என்று சொன்னது பொய் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்தபடி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் யூனிபார்மில் தான் இருந்தனர். என்னிடம் கையொப்பம் வாங்கியவரின் பெயர் எனக்கு தெரியாது. அவருடைய ரேங்கும் தெரியாது.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.02 15:30:49 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**